மாண்புமிகு டாக்டர் திரு. மு. கருணாநிதி : எஸ். பி. ஸி. ஏ. கால் நடைகளுக்குத் துன்பம் ஏற்படாதவாறு அதற்கேற்ற நடவடிக்கைகளைத்தான் எடுத்து வருகிறது. இதுபோன்ற கால்நடைகளைப் பராமரிக்கவும் அவர்கள் யோசித்தால் அரசு அதற்கு ஆதரவு தர முன்வரும்.

Book Presentation Scheme

* 37 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the United Kingdom Government has gifted books under the " Book Presentation Scheme " during September 1971 to the State Government; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தென் பிராந்திய மாநிலங்களிலுள்ள நாற்பது பல்துறைத் தொழில்நுட்பப் பள்ளிகளுக்கு இங்கிலாந்து அரசு நாற்பது அடுக்குப் புத்தகங்களை இலவசமாக வழங்கியுள்ளது. தமிழ் நாட்டில் 11 பல்துறைத் தொழில்நுட்பப் பள்ளிகள் (அரசினர் பள்ளிகள் 3, மானியம் பெறும் பள்ளிகள் 8) இந்த அன்பளிப்பை பெற்றன.

THIRU N. DENNIS : Sir, may I know whether any other country has gifted books under this scheme?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்ற ஆண்டில் இங்கிலாந்து அரசிடம் இருந்து மட்டும் தொழில்நுட்பப் பள்ளிகளுக்கான புத்தக அடுக்குகள் வந்தன. இதுபோல வேறு நாடுகளில் இருந்தும் புத்தகங்கள் வந்திருக்கின்றனவா என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

Development of Madras City

* 38 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that the United Nations assignee to the Delhi School of Architecture, has been invited to advice the State Government for recommending improvements to Madras City.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

THIRU N. DENNIS : Sir, may I know whether any remuneration is given to him?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னையினுடைய இயற்கை அமைப்பை எழில் பொருந்தியதாக ஆக்குவதற்கு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டது. போர்டு ஸ்தாபனத்தின் சார்பாக திரு. டேவின்ஸ் கின்னர் என்பவர் 13—10—1971 அன்று சென்னைக்கு வந்தபோது இதுபற்றி அவரும்